1986 நவம்பர் 25]

விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் வயது வரம்பு.

173—(*வினா எண். 5831) திரு. க. சோலைராசு: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் வயது வரம்பை தளர்த்த அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட இனம் முன்னேறவேண்டுமென்ற அடிப்படையில் அவர்கட்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தர வேண்டுமென்ற எண்ணத்தில் வயது வரம்பைத் தளர்த்தி அவர்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள். அதுபோல் நாட்டுக்குப் புகைழயும், பெருமையையும் சேர்க்கும் வகையில் ஈடுபட்டுள்ள விளையாட்டு வீரர்களின் வயது வரம்பைத் தளர்த்துவது பற்றி அரசு மறுபரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்க அரசு ஏற்கெனவே ஆணை வெளியிட்டிருக்கிறது. அரசு கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்ற பப்ளிக் செக்டார் அண்டர்டேக்கிங்குகளில் வேலை வாய்ப்பகம் மூலம் வராமல் நேரடியாகவே விளையாட்டுத் தேர்ச்சி பெற்றுள்ள, திறமையின் அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரலாமென்ற அடிப்படையில் ஆணையிடப்பட்டுள்ளது. வயது வரம்பைத் தளர்த்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது என்று சொன்னாலும் கூட, போக்குவரத்துறை, உணவுத்துறை ஆகிய துறைகளில் மட்டும் அப்படி வேலை தரப்படுகிறது. எனவே, மற்ற அனைத்துத் துறைகளிலும் விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாட்டினையும், அதேபோல் விளையாட்டை ஊக்குவிக்கின்ற முறையில் ஒவ்வொரு தாலுக்கா தலைமையிடத்திலும் விளையாட்டுப் பயிற்சி மையத்தை கல்வித் துறையின் மூலம் ஏற்பாடு செய்வதையும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆல் பப்ளிக் அன்டர்டேக்கிங்ஸ்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு எல்லா அரசு வாரியங்களுக்கும்,

கழகங்களுக்கும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே ஆணையிடப்பட்டிருக்கின்றது. வட்ட அளவிலே விளையாட்டு மையங்களைப் படிப்படியாக அமைக்க அரசு நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஹேமசந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களில் பலர் வேலைத் தேடித் தரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்து 10 ஆண்டுகள் வரை காத்திருந்தும், இன்றைக்கு வயது வரம்பைத் தாண்டிவிட்ட காரணத்தால் அவர்களுக்கு வேலை கிடைக்காத நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க, பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில், வயது வரம்பைத் தளர்த்தி, அதாவது எக்ஸெம்ஷன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விளம்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அது குறித்துப் பரிசீலிக்கும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த விளையாட்டு வீரர்களாக இருக்கின்ற காரணத்தால், அத்தகைய மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டமுடியவில்லை. ஆகவே, அத்தகைய மாணவர்களுக்கு தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் எடுத்திருந்தாலும், தேர்வு செய்துவிடலாம் என்பதை அரசு பரிசீலிக்குமா? வெளிநாடுகளில் இதுபோன்ற முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரபஷனல் கோர்சஸ். மேல்படிப்புக்கு அதாவது என்ஜினியரிங், மெடிகல், பி.எஸ்.ஸி., (அக்ரி., பி.வி.எஸ்.ஸி., பீ.டி.எஸ்., ஆகியவைகளுக்கு ஏற்கனவே இந்தச் சலுகை தரப்படுகிறது. மேலும் விளையாட்டு வீரர்களுக்கு இத்தகைய ஊக்குவிப்பைத் தருவதற்கு அரசு ஆயும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் எத்தனை விழுக்காடு தரப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே், அது குறித்து தற்போது தகவல் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு வேண்டுகிறேன்.

என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு.

174—(*வினா எண். 8637) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்கள் ஊதிய உயர்வு பற்றி அரசு ஏதும் திட்டமிட்டுள்ளதா?